# தோரணம்
## Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

ஓலை - 1 | சித்திரை2016 | தோரணம் - 3


## தமிழ் புத்தாண்டு 2016



சித்திரையில் அவள் வருவாள்
சிறந்த பலன் தந்திடுவாள்
எத்தினத்து மக்களுக்கும்
ஏற்றமது தந்திடுவாள்
பத்திரமாய்த் துன்முகியாம்
பத்தினியை வரவேற்போம்
சித்தியெலாம் நாம் பெறவே
சிந்தையிலே அவளை வைப்போம்

~ வை.சிவனருட்செல்வர்



**வாசகர்களுக்கு இனிய நல் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

-ஆசிரியர்



## TAMIL NEW YEAR 2016


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர்   வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

# வாசகர் கடிதம்

*Dear All,*

*Thoranam, what a beautiful and well thought name. Thank you (particularly to Niranjan and Indusekaran) for sending this. I am glad that SMS has been incorporating the rhythm of the fast moving technology to make it easier for everyone.*

*Thank you for everyone who have been involved in this courageous activity.*

Very good release from SMS. Extremely useful.—Dr. Ambi

தோரணம் அழகாக அமைந்துள்ளது. அதன் தேவையை நியாயப்படுத்தும் வகையில் உள்ளடக்கம் இருக்கிறது. நல்ல முயற்சி. என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன். இதன் வெளியீட்டில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

அன்புடன் - ஜெகதீஸ்வரன்

**வாழ்த்துகள். நு. பத்திரிகை வடிவமைப்பு பாராட்டுக்குரியது. மிக்க மகிழ்ச்சி. தமிழ் எழு த்துருவை யுனிகோட்டில் கொண்டு வந்தால் விசிறிகள், புள்ளிகள் மாறுபடா.**

**-சிவா பிள்ளை**

Thanks Selvan Anna. your activity is great. welldone & wishes to your efforts. I' ll expect more. thanks.—Malini.(Australia)

*Thoranam looks very good! Especially, the links to Websites and Wikipedia,etc. are very well done. Better than Kalasam!!Great!- Atputhananthan*

***Thanks. Went thro' the attachement patly. Very good effort of yr team. Calender is useful for people like us.***

***Best wishes & keep it up. - Savithri Athi***

Vanakkam. Thanks for sending the "Thoranam" which is wxcellant. Best wishes for its Growth.

-Meera Rajagoplan

**Well done. Keep up the good work. - MPnathan @sky.com**

I am not a religios person. However, I am very impressed about the wwork you are doing. & have undertaken.

My wishes. - Naveendran (P&KAsssociates)

**வாசகர்களுக்கு,**

**எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை மேலும் மேலும் 'தோரணம்' இதழை மெருகூட்டி வெளியிட தங்களைப் போன்ற வாசகர்களின் செய்திகள் உதவுகின்றன.**

**-ஆசிரியர்**

எமது சங்க ஆலயத்தில் யோகர்சுவாமிகளின் 52வது குருபூசை கடந்த 19-3-2016 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. திரு. வ.இ.இராமநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற குருபூசையின்போது. பல்கலைவித்தகி திருமதி அருளாம்பிகை நடராசா அம்மையாரும் அதனைத் தொடர்ந்து திருமதி உமா ராஜ்குமார் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். யோகர் சுவாமி பற்றிய பல செய்திகளையும், அவர காலத்தில் வாழ்ந்த பலர் யோகர் சுவாமிகள் அவர்களுடன் தாங்கள் பெற்ற அனுபவங்களையும் தன்து சிறப்புச் சொற்பொழிவினூடாக திருமதி.உமா ராஜகுமார் அவர்கள் சபையினருடன் பகிர்ந்து கொண்டார்.





"Why do you want to open the outside door when there is an inside door?"

Ill health is also a blessing. The flesh and the ego are weakened and contemplation of God becomes easier.

No Buddhist, no Christian, no Hindu. Deeply religious people have no religion. They belong to no seat, theirs is the religion of the heart!

**ஒரு பொல்லாப்புமில்லை**

**முழுதும் உண்மை**

**சர்வம் சிவன் செயல்**

**சர்வம் சிவமயம்**

**தன்னை அறி**

**சும்மா இரு**

**சுற்றிச் சுற்றி சுப்பருடைய கொல்லை**

**காயமொரு சித்திரக் கோயில்**

**அது அப்படித்தான்**



# Saiva Munnetta Sangam UK

## Enlightenment Circle

Mission to Restore Vision in Vanni for 105 under privileged people on 22-03-2016.





Dr Dias (Surgeon) with Dr Paitha Mahipala

Director General (DG) of Ministry of Health (DGHS)








This camp took place at Mullaitivu Hospital with the help of Dr. Dias (consultant) and his team providing their service free of cost. We would like to express our gratitude to Dr. Dias for his continued selfless services to humanity. Our sincere thanks go to our well-wishers who contributed to this. project.

VIEW MORE

**DHARMA**

***It is most difficult to define Dharma. Dharma has been explained to be that which helps the upliftment of living beings.***

***Therefore, that which ensures the welfare of living beings is surely 'Dharma' The learned rishis have declared that which sustains is 'Dharma'.***

-Srimath Bhagawtham

Educational material distributed for about 60 under privileged, children in Puliyankulam Primary School. In Vanni.





**சைவ முன்னேற்ற சங்க ஆலய, சங்க நிகழ்வுகள் – சித்திரை(April)2016**

13-04-2016 **புதன்கிழமை ~ துன்முகி சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பு (Thamil New Year)**



**30-04-2016 சனிக்கிழமை - மாலை - நடராஜர் அபிசேகம் (Nadarajar Abishekam p.m)**

02-05-2016 திருநாவுக்கரச நாயனார் குருபூசை

24-05-2016 திருஞானசம்பந்தர் குருபூசை

28-05-2016 சங்க மூத்தோர் நிலைய ” பொன் மாலை வேளை”



***Ramsgate, KENT*** , இலுள்ள துர்க்கை அம்மன் ஆலயத் திறப்புவிழாவில் சைவ முன்னேற்ற சங்கத்தின் சார்பின் திரு.,திருமதி. சு.இரத்தினராசா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து உரையாற்றினார்கள்.






**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**

# காரைக்காலம்மையார்

குருபூசை-26-03-2016







காரைக்காலம்மையார் குருபூசை
சென்ற மாதம்26-03-2014 அன்று எமது ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சிறப்புச் சொற்பொழிவை திருமதி.மாதவி சிவலீலன் அவர்கள் வழங்கினார்கள்.

**திருமதி உமா ராஜ்குமார் அவர்களினதும், திருமதி மாதவி சிவலீலன் அவர்களின் சொற்பொழிவுகளை வரும் இதழ்களில் தரலாமென்றிருக்கிறோம்.**

# அன்னையர் தினம் Mothers Day

**அன்னையர் தினம் எமது சங்கத்தில் சென்ற 11-03-2016 அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. சங்க அங்கத்தினர்கள் அனைவரும் அன்னையர் தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். எமது சமூக சேவைச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி சபாரட்னம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளை எமது சங்க பொதுச் செயலாளர் திரு. மு. இந்துசேகரன் அவர்கள் முன்னின்று நெறிப்படுத்தியிருந்தார். அன்று சமூகமளித்திருந்த அன்னையர்கள் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்ததுடன் வாழ்த்து அட்டைகளையும் ரோஜா மலர்களையும் வழங்கி கௌரவித்திருந்தார்கள். பின்பு அன்னையர்களில் பலர் தாயன்பு பற்றிய தங்கள் அனுபவங்களை சபையிலிருந்தோர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். அன்றைய மதிய போசனத்துடன் நிகழ்வுகள் இனிதே நிகழ்பெற்றது.**









தாயன்பைப்பற்றி திரு. கஜெந்திரபோஸ், திரு.ம.இந்துசேகரன், திரு.பரமேஸ்வரன், திருமதி கருணா சேனாதிராசா, திருமதி.சரோஜா கனகசபேசன் ஆகியோர் சரபயினருடன் அனுபவங்களை பபகர்ந்து கொணடனர்

**எல்லாக்குற்றங்களையும் மன்னிக்கும் ஒரே நீதிமன்றம்**

**அம்மாவின் இதயமே!**

# Hinduism

## Scientifically Proven Religion in the Planet

By. Mr. Sothiratnam Niranjan MSET, MinstLM

**Hinduism:**

The most Scientific Religion.

**Vedic Hinduism:**

Know Your History : Science and Religion. It is more than a religion; it is a way of life. It is not a man made religion, founded or created by any prophet. It has no origin and no end.

**The Science of Tamilar Agamic Temple:**

Scientific Treatise of Saiva Religion. The Science of Tamilar Agamic Temple is a concise, in depth scientific and psychological research work of Saiva Religion . Saivism is not a religion by nature but it is a TRUTH seeking science and it is belongs to all the Human Beings

**Scientific Verification:**

The ancient Vedic literatures can be shown to agree with modern scientific findings and they also reveal a highly developed scientific content in these literatures Marine Archaeology of underwater sites (such as Dwaraka)

**Vedic/Hindu/Indian civilization:**

The Most Advanced, Oldest and Continuous Civilization. Jeffrey Armstrong on Indian Culture, Vedas and Ancient Flying Machines

**Secret 5000 Year Old:**

Vimana Found to Change the world

**Vimanas:**

Ancient flying machines of India

In our next newsletter,

Don't Miss to click & Watch the Scientifically proven video documentaries on Mahabaratha war, Dwaraka city under the sea, Rama Bridge Construction (Between Sri Lanka and India), Invention of Ravana's Pushpaka Vimanas (Flying machines) and theirs airports in Sri Lanka .







பிரித்தானிய மகாராணியின் 95வது பிறந்தநாளையொட்டி Manor Park இல் பொது நூலகம் முன்பாக உள்ள வீதிகளை துப்பரவு செய்யும் முயற்சிகளில் எமது சங்கத்தின் சார்பில் எமது ஆட்சிக்குழு அங்கத்தினர்களான திரு. ஆனந்ததியாகர் திருமதி.

விஜி.கனகேந்திரன், திரு. ச.குகராஜா திரு. சூ.பாலசிங்கம் திருமதி.காந்திமதி சூரியகுமார், திரு.ஜெகேந்திரபோஸ் ஆகியோர் பங்குபற்றினார்கள். அவர்கள் மத்தியில் NEW HAM Council Mayor திரு.Sir Robert Andrew "Robin" Wales அவர்களைக் காண்கிறீர்கள்

## துன்முகிப் புத்தாண்டு பிறப்பு விழா 13-04-2016 புதன்கிழமை மாலை 6.30 மணி முதல்

நடப்பு வருட மன்மத ஆண்டு நிறைவு பெற்று எதிர்வரும் சித்திரை மாதம், துன்முகி என்ற பெயருடன் பிறக்கும் தமிழ் புதுவருடத்தை எமது சங்க ஆலயத்தில் இறை வழிபாட்டுடன் கொண்டாடி வரவேற்று எம் பெருமான் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் அருள் பெற்று பிரார்த்திக்க வருமாறு எமது சங்க அங்கத்தவர்கள்,ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம்:** எமது சங்க அருள்மிகு நடராஜர் சந்நிதி

**காலம்:** எதிர்வரும் துன்முகி ஆண்டு சித்திரை மாதம் முதலாம் நாள்

13—04—2016 புதன்கிழமை மாலை 6.30 மணிமுதல்

**நிகழ்ச்சிகள்** — ஸ்ரீஞானவிநாயகப்பெருமானுக்கு அபிஷேகம், கூட்டு வழிபாடு, பூசை, புத்தாண்டுப்பலன் படித்தல், ஆசியுரை, வாய்ப்பாட்டு, சங்கீதம் கலசம் 81வது இதழ் வெளியீடு, கைவிஷேசம் வழங்கல் நன்றியுரை என்பன இடம்பெறும்.

## எமது சங்க அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகள்

## வாழ்த்துச்செய்தி

திருச்சிற்றம்பலம்

“தோரணம்” மின்னிதழ் மின்னம்பலம் ஊடாகத் தம்பணி உணர்த்தவும் பிறர் எண்ணம் அறிந்து சிவப்பணியும் தமிழ்ப்பணியும் செய்திடவும் திருவருளால் தொடக்கமுறுதல் புலத்து தமிழர்க்கு பெருமகிழ்ச்சி தரும் நிகழ்வாகிறது.

இன்றைய செல்நெறியாக தரவுகள் மின்னம்பலத்தில் உலகெங்கும் பயணித்தல் அமைகிறது. இந்தக் காலமாற்றத்தைக் கருத்தில் கொண்டு “தோரணம்” சைவ முன்னேற்றச் சங்கத்திலுள்ள திரு.ம.இந்துசேகரன், திரு.சோ.நிரஞ்சன், திரு.வை. சிவனருட்செல்வர் ஆகியோரின் தீவிர முயற்சியில் நடராஜப் பெருமான் அபிஷேக தினமான 21.02.16 அன்று மின்னிதழை தொடங்கியது சங்கத்தின் பெருவளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகிறது.

“கலசம்” காலாண்டிதழை அங்கீகாரம் பெறவைத்த முயற்சியாக அதற்கு ISSN இலக்கம் என்னும் நூலகத் தொடர் இலக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. உலகத் தமிழாராச்சி நிறுவனம் தனது சென்னையிலமைந்துள்ள நூலகத்தில் கலசம் இதழைக் கண்டபொழுதும், பிரித்தானிய Oxford University Library , என்பவற்றில் கலசம் இதழ்களைக் கண்டபொழுதும் திரு.சோ.நிரஞ்சனின் முயற்சியும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஒத்துழைப்பும் எத்தகையது என்பதை உணர—முடிகிறது.

இன்று எமது மண்ணின் மங்கலச் சின்னமாக இலங்கும் “தோரணம்” என்பதனையே தன் தலைப்பாகக் கொண்டு தொடங்கப்பட்ட இம்மின்னம்பலம் பொன்ம்பலதாசனின் பெருவருளால் பாரெங்கும் அருள்மழை பொழி அவனருளாலே அவன் தாள் வணங்கி இன்தமிழால் இதயத்தன்புடன் வாழ்த்துகின்றேன்.

S.J.பற்றிமாகரன்

# பொன்மாலை வேளை

**அன்புள்ள சங்க அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள**

**அனைவருக்கும் வணக்கம்**

**சைவ முன்னேற்ற சங்கத்தின் ஒரு அங்கமான நால்வர் மூத்தோர் நிலையம் இலண்டனில் முதன் முறையாக 'பொன்மாலை வேளை' என்னும் பல்சுவை நி- கழ்ச்சியொன்றை நடத்தவுள்ளார்கள். எமது மூத்தோர் நிலைய அங்கத் தவர்களும், இலண்டனிலுள்ள வேறு பல மூத்தோர் நிலைய அங்கத்தவர்களும் இப்பொன்மாலை வேளை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி உங்கள் எல்லோரையும் மகிழ்விக்க இருக்கிறார்கள். இவ்வினிய நிகழ்ச்சிக்கு நீங்கள் எல்லோரும் வருகை தந்து மூத்தோர்களாகிய எங்கள் அனைவரையும் ஊக்குவித்து வாழ்த்தும்படி பணிவாக அழைக்கின்றோம்.**

**இடம் :- WoodBridge High School**

**St. Barnabas Road**

Woodford Green

IG8 7DQ

**காலம் :- 28-05-2016 சனிக்கிழமை மாலை 4.00 மணி முதல்**

***நாடகம் *பாட்டு *இசை *கிராமிய நடனம் இன்னும் பல பல்சுவை நிகழ்ச்சிகள்.**

**இந்த விழாவைக் கண்டு களிக்க தவற வேண்டாம்.**

**பிரவேசம் இலவசம்** Admission free

**தொடர்புகளுக்கு : 0208 551 3823 (திருமதி. பு.சபாரட்னம்)**

**: 07872 144 794 (ம.இந்துசேகரன்)**

Saiva Munnetta Sangam(UK) 2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel.020 8514 4732.Reg.Cahrity No.292085 . www.saivamunnettasangam.com email:smsukinfo@gmail.com

## "கலசம் சித்திரைப் புத்தாண்டு ஆன்மிக இதழ்"

"கலசம்"சித்திரை மாதம் 2016ம் ஆண்டிற்கான 81வது ஆன்மிக இதழ் வரும் சித்திரைப் புத்தாண்டு தினமான 13-04-2016 அன்று எமது சங்க ஆலயத்தில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்
















இலங்கையில் மட்டக்களப்பில் உள்ள எமது நால்வர்கோட்ட த்தில் பொங்கல்விழா மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. எமது யோகா நிலையத்தினரால் ஆண்டுதோறும் அங்குள்ள மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள் வழங்கி வருகிறார்கள்.